மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : ஒவ்வொருவிதமான நிலத்திற்கு ஒவ்வொரு வரம்பு இருக்கிறது. ஏலக்காயைப் பொறுத்தவரையில் 50 ஏக்கராவுக்குக் கீழே.

'அமிர்தி காடு'

* **265 வினா.—திரு. மா. பா. சாரதி :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காட்டிலுள்ள 'அமிர்தி காட்டை' (Amirthy Forest) அபிவிருத்தி செய்யும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

(இ) வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா ?

(உ) ஆம் எனில், எவ்வளவு செலவில் ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(இ) அமிர்தி குன்னிகுளம் சாலை வேலை 1969-70-ல் துவக்கப்பட்டிருக்கிறது ?

(உ) ரூபாய் 40,000 சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது.

திரு. மா. பா. சாரதி : தலைவரவர்களே, அமிர்தி காட்டில் சுற்றுலாப் பயணிகள் அவ்வப்பொழுது அதிகமாக வந்து, போவதால் மேலும் விரிவுபடுத்தி, சுற்றுலா மாளிகையை சீர்செய்து அங்கு அமைக்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அது சுற்றுலா இடமாக இருப்பதுபற்றி அரசாங்கத்திற்குக் கவனம் இருக்கிறது. சாலை வசதிக்காக 40,000 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மத்திய சர்க்காரை 'சாங்க்சுவரி' அமைக்க வேண்டுமென்று கேட்ட சமயத்திலே நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 'ஓர்க்கிங் போர்ட்' மூலமாகப் புதிதாக அமைக்க வேண்டாம், ஏற்கெனவே உள்ள 'சாங்க்சுவரி'-யை விரிவுபடுத்த வேண்டும், 'ஸூ'-க்களைக் கண்காணிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே செய்து வருகிறோம். நல்ல போக்குவரத்து வசதியை ஏற்படுத்த வேண்டுமென்று 40,000 ரூபாய் சாங்ஷன் செய்திருக்கிறோம்.

திரு. மா. இராசாங்கம் : தலைவரவர்களே, இந்த அமிர்தி காட்டைப் போல், தமிழ்நாட்டில், தென் மாவட்டங்களில் ஏராளமான காடுகள் மலையோரங்களில், மரங்கள் இல்லாமல், வேறு எதுவும் உண்டாகாமல், ஆனால் விவசாயத்திற்குப் பயனுள்ள இடங்களாகப் பல மலையடிவாரங்கள் இருக்கின்றன. அவற்றை விவசாயத்திற்குப் பயன்படுத்தும் முறையில் நிலமற்ற ஏழை விவசாயிகளுக்குக் கொடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இப்பொழுதே குமரி சாகுபடி என்று குத்தகைக்கு விடப்படுகிறது. ஆனால், இப்பொழுதிருக்கும் நிலம், அண்மையிலுள்ள மாநிலங்களை, பல மாநிலங்களை ஒத்துப்

1969 செப்டம்பர் 12]

பார்க்கும்பொழுது, காடு மிகவும் குறைவாக இருப்பதால், அதிகமான நிலங்களைத் தனியாருக்கு விடுவது முறை இல்லை. விவசாயத்திற்குத் தகுந்த இடங்கள் இருப்பதாகத் தெரிவித்தால் கும்ரி சாகுபடிக்கு விடலாம்.

Radio Programmes

* 253 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether any study has been undertaken into the scheme of Community listening to radio programmes in this State?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: இம்மாநிலத்தில் வானொலி நிகழ்ச்சிகளை மக்கள் சமுதாயத்தினர் கேட்கும் திட்டம் குறித்து ஆய்வு ஏதும் மேற்கொள்ளப்படவில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவரவர்களே, தற்பொழுது சென்னை, திருச்சி வானொலி நிலையங்களிலிருந்து ஒலிபரப்பப்படும் வர்த்தக ஒலிபரப்பு ஜனரஞ்சகமாக இருக்கிறது. ஆனால், சக்தி வாய்ந்த அலைகளினால் ஒலிபரப்பப் படாததினால், தொலை தூரங்களிலேயுள்ளவர்கள் சரியாகக் கேட்க முடியவில்லை. எனவே, சக்தி வாய்ந்த முறையில் ஒலிபரப்புவதற்கு மத்திய சர்க்காருக்கு யோசனை கூறுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: இந்தக் கேள்வியின் மூலக் கருத்தானது, கிராம வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் வானொலி எந்த வகையில் பயன்படுகிறது என்பதைக் கொண்டது. அதற்கான குறிப்புரைகளின் அடிப்படையில், ஒவ்வொரு நாளும் 7½ மணி முதல் 8 மணி வரை திருச்சி வானொலி நிலையம் கிராம வளர்ச்சித் திட்டங்களைக் குறித்த நிகழ்ச்சிகளை மிகச் சிறப்பாக நடத்தி வருகிறார்கள்.

திரு. கொடவாசல் சி. கிருஷ்ணமூர்த்தி: தலைவரவர்களே, இந்த வானொலி நிகழ்ச்சியில், விவசாயத்தைப் பொறுத்தவரையில், சட்ட சபை நிகழ்ச்சிகளும் இடம்பெறும் வகையில் மத்திய அரசுக்கு யோசனை கூறுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி, வானொலி நிகழ்ச்சிகளைக் கிராம மக்கள் எந்த அளவுக்குக் கேட்கிறார்கள் என்பது பற்றியது.

திரு. இல. பலராமன்: தலைவரவர்களே, வானொலி நிலையத்தின் மூலமாகக் கிராம அபிவிருத்திக்கும், கிராம விவசாய உற்பத்திக்கும், கிராம விவசாயிகள் சங்கங்கள் மூலமாகக் கேட்கப் படும் கேள்விகளுக்கு வானொலி பதில் தருகின்றது. கிராம விவசாயிகள் சங்கம் தமிழ்நாடு பூராவும், எத்தனை இருக்கின்றன? எத்தனை நல்லமுறையில் செயல்படுகின்றன?